**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்**

**முன்னிலை : B.ராஜா, பி.ஏ., பி.எல்.,**

**கூடுதல் சார்பு நீதிபதி, பழனி.**

**2026ம் ஆண்டு ஜுன் மாதம் 30-ம் நாள் செவ்வாய்கிழமை**

**(2058 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனித்திங்கள் 16-ம் நாள்)**

**இடைநிலை மனு எண்.03/2025**

**அசல் வழக்கு எண்.194/2023**

ஹரிஸ்.

த/பெ. நாகராஜ் --- மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

தங்கவேல்,

த/பெ.கருப்பச்சாமி --- எதிர்மனுதாரர்/வாதி

மனுவானது இறுதியாக, கடந்த 15.06.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.R.இளையபாரதி** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.S.ஜெயராமன்** அவர்கள் ஆஜராகியும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த மனுக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாக பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்து, இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

**01)** மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பேங்க் ஆப் பரோடா வங்கியில் கணக்கு துவங்கும் விண்ணபத்தில் இடப்பட்ட கையொப்பத்தையும், 10.10.2021-ஆம் தேதியிட்ட கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பத்தையும் தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்தி கையெழுத்து நிபுணரின் ஆய்வு அறிக்கை பெற உத்தரவிடக்கோரி சி.பி.சி.

ஆர்டர் 26 ரூல் 10(ஏ) மற்றும் பிரிவு 151-ன்படியும் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>02) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. மனுதாரர் எதிர்மனுதாரரிடம் கடந்த 10.10.2021-ம் தேதி ரூ.95,000/-ஐ கடனாக பெற்றுக் கொண்டு அன்றைய தேதியிலேயே ஒரு பிராமசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளதாகவும் மேற்படி கடனை வசூல் செய்ய எதிர்மனுதாரர் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் இந்த மனுதாரர் விரிவான எதிர்வாதுரை தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி எதிர்வாதுரையில், தாவா பிராமிசரி நோட்டில் இருக்கும் கையெழுத்து மனுதாரருடையது தான் என்பதை அறிவியல் பூர்வமாக எதிர்மனுதாரர் தான் நிரூபிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதுநாள்வரை அவ்வாறு நிரூபிப்பதற்கு எதிர்மனுதாரர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதனால் மிகுந்த சிரமத்தின் பேரில் பிராமிசரி நோட்டு தேதிக்கு முந்தை தேதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடந்த 12.02.2018-ம் தேதியில் மத்திய அரசிடம் பெற்ற நிரந்தர கணக்கு அட்டையில் கையெழுத்திட்டுள்ளதும், 12.07.2016-ம் தேதியில் ஓட்டுனர் உரிமத்தில் கையெழுத்திட்டுள்ளதும் கிடைத்தது.

மேலும், கடந்த 2019-ம் தேதிக்கு முன் மனுதாரரால் பேங்க் ஆப் பரோடா பழனி கிளை (முந்தைய விஜயா வங்கி) யில் சேமிப்பு கணக்கு துவங்கும் பாரத்தில் கையொப்பமிட்டுள்ளது தெரியவந்தது. தங்க நகைகளை அடமானம் வைத்த படிவங்களில் கையெழுத்துட்டுள்ளதும், கடந்த 02.03.2019-ல் விஜயா வங்கி காசோலை கோரும் படிவத்தில் வங்கி அலுவலர் முன்பு கையெழுத்திட்டுள்ள ஆவணமும் கிடைத்துள்ளது.

பேங்க் ஆப் பரோடா பழனி கிளை வங்கியில் கணக்கு துவங்க மனுதாரரால் கையெழுத்திடப்பட்ட அசல் ஆவணத்தில் உள்ள மனுதாரருடைய

கையெழுத்துக்களுடன் தாவா பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்தை மதுரையில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை தடவியல்துறைக்கு அனுப்பி மேற்கண்ட கையெழுத்துக்களை ஒப்பீடு செய்து அறிக்கை பெற நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து உத்தரவிடக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பரிசோதனைக்குரிய கட்டணத்தை செலுத்த தயாராக இருக்கிறார். மனுவை அனுமதிக்காதபட்சத்தில் மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க இயலாமற் போய்விடும். இதில் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட போவதில்லை.

எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பேங்க் ஆப் பரோடா வங்கியில் கணக்கு துவங்கும் விண்ணப்பத்தில் இடப்பட்ட கையொப்பத்தையும், 10.10.2021-ஆம் தேதியிட்ட கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பத்தையும் தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்தி கையெழுத்து நிபுணரின் ஆய்வு அறிக்கை பெற மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலை நிற்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரரே சட்டப்படியும் நியாயப்படியும் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுதாரரின் மனு தள்ளுபடிக்குரியதாகும்.

மனுதாரர் மனுவில் கூறியுள்ள ஆவணங்கள் அனைத்தும் மனுதாரரின் அசல் கையெழுத்து அல்ல. அவை அனைத்தும் மின்னனு முறையில் பெறப்பட்ட கையெழுத்தாகும். அதனை வழக்கு பிராமிசரி நோட்டுடன் ஒப்பீடு செய்ய முடியாது.

மேலும், பிரதிவாதி வங்கியில் கையொப்பம் இட்டதற்கும் பிராமிசரி நோட்டில் கையெழுத்திட்டதையும் ஒப்பீடு செய்து பார்க்க முடியாது. ஏனென்றால் மேற்படி வங்கியில் மனுதாரர் கணக்குத் துவங்கியது வழக்கு பிராமிசரி நோட்டு தேதிக்கு

முந்தைய வருடத்தியதாகும். மனுதாரர் தன்னுடைய குறுக்குவிசாரணையில் தனக்கு அழைப்பானை வந்தது அந்த அழைப்பானையை தான் கையொப்பம் செய்து பெற்றுக்கொண்டதாக கூறிவிட்டு, அந்த அழைப்பானையில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்று கூறியுள்ளார்.

அதேபோல், இ.ம.எண். 1/2024-ல் பிரமாணவாக்குமூலத்தில் இருப்பது தன்னுடைய கையொப்பம் அல்ல. அதேபோல் வாதி பதிலுரை தாக்கல் செய்வதற்காக அனுமதி கோரி தாக்கல் செய்த மனுவில் மனுதாரர் எதிர்உரை தாக்கல் செய்துள்ளார். அந்த இ.ம.எண். 2/2025-ல் உள்ள மனுதாரரின் கையொப்பமும் தன்னுடையது அல்ல என்று குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் கையொப்பமிட்டுள்ள பல மனுக்களிலும் உள்ள கையொப்பம் அல்ல என்று பொய்யாக கூறியுள்ளார்.

இவ்வழக்கினை விரைவாக முடிக்காமல் காலம் தாழ்த்த வேண்டும் என்ற தீய எண்ணத்திலும் எதிர்மனுதாரர் கோரியபடி பரிகாரம் பெறுவதை மோசடி செய்யும் எண்ணத்திலும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>6. பிரச்சனைக்கான தீர்வு:-</u>

இருதரப்பிலும், ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்துள்ளது.

கடந்த 10.10.2021-ஆம் தேதி மனுதாரர், எதிர்மனுதாரரிடம் பெற்றுள்ள கடன் பணம் ரூ.95,000/-க்கு மனுதாரர் எதிர்மனுதாரர் பெயருக்கு தாவா கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுத்துள்ளநிலையில், பின்னிட்டு அதனை திருப்பி செலுத்தாத

காரணத்தினால், மேற்படி கடனை பின்வட்டியுடன் திரும்ப பெறுவதற்காக எதிர்மனுதாரரால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நிலுவையில் உள்ளது.

அசல் வழக்கு விசாரணையில் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் அனைத்தும் முடிவுற்றுள்ள நிலையில், மனுதாரர் தரப்பில் பி.வா.சா.1 சாட்சியம் விசாரணை செய்யப்பட்டு, பிற சாட்சியங்களை விசாரணை செய்வதற்காக வழக்கு நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா பிரச்சனைக்குரிய வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டு ஆவணத்தில் உள்ள மனுதாரரின் கையெழுத்தையும், மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் காணப்படும் மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்படும் கையெழுத்துக்களையும் கையெழுத்து நிபுணரின் ஆய்விற்கு அனுப்ப உத்தரவிட வேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில், தாவா கடனுறுதிச் சீட்டில் உள்ள கையெழுத்து மனுதாரருடையது கிடையாது என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், தாவா கடனுறுதிச் சீட்டு மனுதாரரால், எதிர்மனுதாரருக்கு தகுந்த மறுபயனுக்காக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள உண்மையான ஆவணம் என்ற வழக்கு சங்கதியை நிரூபிக்கும்சுமை அசல் வழக்கை தாக்கல் செய்துள்ள எதிர்மனுதாரரைச் சார்ந்ததாகும்.

மேலும், தாவா கடனுறுதி சீட்டு கடந்த 10.10.2021-ஆம் தேதி ஏற்பட்டுள்ளதாக வழக்கில் கூறப்படும் நிலையில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் எந்த ஒரு ஆவணமும் மேற்படி சமகாலத்திய ஆவணம் கிடையாது என்ற உண்மையை தெரிந்து கொள்ள முடிகிறது.

இச்சூழ்நிலையில், மனுதாரர் மனுவில் முன்வைத்துள்ள மனுப்பரிகாரம் சட்டப்படியாக மனுதாரருக்கு கிடைக்க முடியாது என முடிவு செய்யப்பட்டு, மனுப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

7. முடிவில், இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30-ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.06.30 18:28:37 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

| | | |
|---|---|---|
| **மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** | : | இல்லை |
| **எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** | : | இல்லை |

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.06.30 18:28:44 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

I.A.No.3-2025

in

O.S.No.194/2023

Order- Fair/Draft